REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(13—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை:	மக்கள் சபை:
7	1

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை:	மக்கள் சபை:
9,10,758	2,77,926

மலர் 4] சென்னை: மாசி 30உ புதன் (13—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 1உ வியாழன் (14—3—57) [இதழ் 235

மத்திய சர்க்கார் ஆட்டம் கண்டுவிட்டது!

சுதந்திரம் வழங்கக் கோரி 52 தலைவர்கள் கோரிக்கை

போர்னியோவிலும் ஜகார்தாவிற்கு எதிராகப் புரட்சி

ஜாவாவில் மட்டுமே சுகர்ணோவின் அதிகாரம் செல்லுபடியாகும்

ஜகார்தா, மார்ச் 12—

"எங்களை நாங்களே ஆண்டுகொள்வதற்கு வழி செய்யும்வண்ணம் எங்களுக்குச் சுதந்திரம்—விரிவான முழுப் பொருளுடன்கூடிய சுதந்திரம் வேண்டும்" என்று, கிழக்கு இந்தோனேஷியாவைச் சேர்ந்த 52 தலைவர்கள் கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்தோனேஷிய மத்திய சர்க்கார் ஆட்டம் கண்டுவிட்டது! இப்போது அது பெயரளவுக்கே அதிகாரமுடைய ஆட்சியாக விளங்குகிறது!

எட்டு கோடி மக்களைக் கொண்ட இந்தோனேஷியாவின் 10 சதவிகித பரப்பளவு கொண்ட ஜாவா மாகாணத்தில் மட்டுமே மத்திய சர்க்காரின் அதிகாரம் செல்லுபடியாகும்.

இதர மாகாணங்கள் 'புரட்சி' செய்து சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டுவிட்டன. அந்த மாகாணங்களில், 'புரட்சிக் கவுன்சில்' ஆட்சிப் பொறுப்பை எந்தவித சிரமமுமின்றி—அதாவது மாகாண மக்களின் முழு விருப்பத்தோடு கைப்பற்றியுள்ளனர் என்று தெரிகிறது.

கடந்த டிசம்பர் திங்களில் மத்திய சுமத்திரா மாகாணத்தில் துவங்கிய இந்த மத்திய சர்க்காருக்கு எதிரான புரட்சியில், இன்று மோர்னியோ மாகாணமும் சேர்ந்துகொண்டது.

இப்போது ஜகார்த்தாவில் உள்ள மத்திய சர்க்காரின் அதிகாரம், ஜாவா எல்லைக்கப்பால் செல்லாது.

போர்னியோவின் ஆட்சிப் பொறுப்பும் கர்னல் ஹாசன் பாஸ்ரி என்பார் கையில் வந்துவிட்டது.

வெறுப்பு

'மத்திய சர்க்கார் மீது மாகாண மக்கள் கொண்டுள்ள வெறுப்பு, அதிருப்தி இவற்றையே இந்த மாகாணங்களில் நடைபெற்றுள்ள புரட்சியும், அதன் விளைவான ஆட்சி மாறுதலும் கூறுகின்றன,' என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய சர்க்காரின் அதிகாரம் செல்லுபடியாகக்கூடிய ஜாவா, இந்தோனேஷியாவின் பரப்பில் 10 சதவிகிதமே இருந்தாலும் எட்டு கோடி மக்களில் 60 சதவிகிதம் மக்களைக் கொண்டது என்பதாலேயே மத்திய சர்க்காரில் ஆதிக்கம் வகிக்கவும், இதர மாகாண மக்களை அலட்சியப்படுத்தி அவர்களை அடக்கி ஆதிக்கம் செலுத்தவும் முடிகிறது என்றும் விளக்கம் தரப்படுகிறது.

எகிப்தின் அறிவிப்பு தோற்றுவித்துள்ள நெருக்கடி

ஐ. நா. செயலாளர் அவசர ஆலோசனை

வெளியேறுமாறு கூற எகிப்திற்கு அதிகாரமில்லை என்கிறது நார்வே!

ஒஸ்லோ மார்ச் 12—

"'வெளியேறுக' என்று எகிப்து கோருவதாலேயே நாங்கள்—ஐ. நா. படையில் உள்ள எங்கள் துருப்புகள் வெளியேறிவிட வேண்டுமென்பதல்ல" என்று நார்வே சர்க்கார் வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறாராம்.

"ஐ. நா. படை அமைந்ததும் செயல்படுவதும் ஐ. நா. பொதுச் சபைத் தீர்மானப்படிதான்; எனவே, படையினர் வாபசாக வேண்டுமா என்பதைக் கூற வேண்டியதும் ஐ. நா. பொதுச் சபைதான்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் இதற்கிடையில் பின்லந்து சர்க்கார், 'எகிப்து, எங்கள் படையினர் திரும்பிச் செல்ல வேண்டும் என்று விரும்பினால் எங்கள் இராணுவத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுவோம்' என்று கூறியிருக்கிறது.

ஆனால் எகிப்து, காஜாவிலிருந்தும் சினாய் பாலைவனப் பிரதேசத்திலிருந்தும் ஐ. நா. படையினர் திரும்பிச்செல்ல வேண்டுமெனக் கோரும் என்று கெய்ரோ வானொலி கூறியிருக்கிறது.

எகிப்தின் பிரிக்கமுடியாத பகுதியான காஜாவில் ஐ. நா. படை நிரந்தரமாகத் தங்கிவிட எண்ணுவதாகவும், இந்த எண்ணம் எகிப்திற்கும், ஐ. நா. செயலாளருக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு முரணானதாகும் என்றும் வானொலி கூறியிருக்கிறது.

ஐ. நா.-வில்!

இதற்கிடையில் ஐ. நா. செயலாளர், ஐ. நா. படையின் ஆலோசனைக் குழுவினை, கடந்த 24மணி நேரத்திற்குள் இரண்டு முறை கூட்டி ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

காஜாவின் நிர்வாகத்தைத் தாங்களே மேற்கொள்ளப்போவதாக வெளியிட்டிருக்கும் எகிப்தின் அறிவிப்புத் தோற்றுவித்துள்ள புதிய நெருக்கடிபற்றி அவர் ஆலோசித்து வருகிறாராம்.

சென்னை சட்டசபைத் தேர்தல்

கட்சிகள் நிலவரம்

சென்னை, மார்ச் 13—

சென்னை சட்டசபைக்கு இதுவரையில் 136 இடங்களுக்குமுடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சி நிலவரங்கள் வருமாறு:—

தி. மு. கழகம்	7
பி. சோ.	1
சோஷலிஸ்டு	1
சுயேச்சை	12
கம்யூனிஸ்டு	2
பார்வர்டு பிளாக்	2
கா. சீ. க.	12
காங்கிரஸ்	99

அரிவாள்-சுத்தி சின்னத்தை இடித்துத் தள்ள முயற்சி

இஸ்தான்புல், மார்ச் 11—

இங்குள்ள ரஷ்யத் தூதுவாலயத்தை அங்கேரிய அகதிகள் இரவு நேரத்தில் முற்றுகையிட்டு இரும்பு வாயிலில் உள்ள அரிவாள்—சுத்தி சின்னத்தை இடித்துத்தள்ள முயற்சித்ததையொட்டி நான்கு பேர் கைது செய்யப்பட்டனராம்.

பிரிட்டனில் இராணுவ பலம் குறைகிறதாம்!

இலண்டன், மார்ச் 11—

பிரிட்டனின் இராணுவ பலம் குறைக்கப்படுகிறதாம்!

சென்ற ஆண்டில் 40,3,000 ஆக இருந்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 3,70,000 ஆகக் குறைந்துள்ளதாம்—அதாவது, சென்றஆண்டினைவிட 33,000வீரர்கள் இராணுவத்தினர் எண்ணிக்கையில் குறைந்திருக்கின்றனராம்!

இந்தத் தகவலைத் தந்துள்ள பிரிட்டிஷ் யுத்த மந்திரி ஜான் ஹாரே இராணுவத்தின் அமைப்பு பற்றி தீவிரமான பரிசீலனை நடைபெறுவதாகவும், வரப்போகும் தலை முறையில் இராணுவத்தின் உரு எப்படி இருக்க வேண்டுமென்பது நிர்ணயிக்கப்படும் என்றும் கூறியுள்ளாராம்.

இலங்கைத் தமிழரின் ஆவேச எழுச்சி

பண்டா சர்க்காரின் சிங்கள வெறியைத் தணிக்கிறது

தமிழ் மொழிக்குப் பாதுகாப்பு அரசியல் சட்டம் மூலம் வழங்க ஏற்பாடு?

கொழும்பு, மார்ச் 11—

பண்டாரநாயகா சர்க்காரின் சிங்கள வெறி, தமிழரின் ஆவேசமான எழுச்சிக்குப்பின் சிறிது தணிந்து வருகிறது என்பதற்கான சூசகங்கள் தென்படுகின்றன.

தமிழ் மொழியையும் ஆட்சியில் நியாயமான அளவு உபயோகித்துக்கொள்ளுவது என்றும், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புத் தருவது என்றும், இந்த உறுதிமொழிகளை அரசியல் சட்டத்தின் மூலம் உறுதி செய்து தருவது என்றும் இப்போது பண்டாரநாயகா சர்க்கார் கருதுவதாகத் தெரிகிறது.

பாதுகாப்புகள்

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்பதை அங்கீகரித்துக்கொண்டு தமிழ் மொழிக்குச் சில பாதுகாப்புகள் தரப்படுமாம்.

அதாவது,

1. தனிப்பட்டவர்கள் அரசாங்கத்துடன் தாங்கள் விரும்பும் மொழியில் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளலாம்; சர்க்கார், அவர்கள் எந்த மொழியில் கடிதம் எழுதினார்களோ அதே மொழியில் பதில் தருவார்கள்.
2. கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் போதனமொழிகளாக இருக்கும். ஆட்சி மொழிக் கொள்கை இதில் குறுக்கிடாது.
3. ஸ்தலஸ்தாபனங்கள் தாங்கள் விரும்பும் மொழியில் நடவடிக்கைகளை வைத்துக் கொள்ளலாம்.
4. பிரதேசக் கவுன்சில்கள் மூலம் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் 'சுதந்திரம்' வழங்குதல்.
5. சர்க்கார் வேலைகளுக்கு ஆள் பொறுக்குவதில் மொழிப் பாரபட்சம் காட்டப்பட மாட்டாது; அதற்கான பரீட்சைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்படும்.
6. ஏற்கனவே சர்க்கார் வேலையிலிருப்பவர்கள் சர்க்காரின் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழிக் கொள்கையினால் அதிகம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வது!

இந்த முக்கியமான ஆறு அம்சங்களை அரசியல் சட்டத்தில் இணைப்பதுபற்றி பண்டா சர்க்கார் ஆலோசித்துவருவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றனவாம்.

மத்தியக் கிழக்கில் சாந்தி நிலவ!

இரஷ்யாவின் திட்டத்தை மேற்கு வல்லரசுகள் நிராகரிக்கின்றன

லண்டன், மார்ச் 11—

பிரதேசத்தில் உள்ள அந்நியத் தளங்கள் அத்தனையும் ஒழிக்கப்படவேண்டும் என்பனபோன்ற சீரிய அம்சங்கள் கொண்ட ரஷ்யாவின் புதிய மத்திய கிழக்குத் திட்டத்தினை, மேற்கு வல்லரசுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவை நிராகரித்து விட்டன என்று தெரியவருகிறது.

நிராகரித்ததும் இன்றி அவை, ரஷ்யா, மத்திய கிழக்குப் பிரதேசத்திற்கு ஏராளமாக ஆயுதங்களை ஏற்றுமதி செய்து வருவதாகவும் கூறி கண்டனம் எழுப்பியுள்ளன.

ரஷ்யா, கடந்த பிப்ரவரி 11-ந் தேதி வெளியிட்ட திட்டத்தில் மற்றொரு முக்கிய அம்சம், மத்தியக் கிழக்கு நாடுகளை எந்தவித இராணுவக் கூட்டுக்களிலும் இழுக்கக்கூடாது என்பதாகும்.

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13—3—57 புதன்

இறுதி துரிதமாகும்!

மத்தியக் கிழக்கில் நெருக்கடி தணிந்து வருகிறது என்ற கூற்றைப் பொய்ப்பித்தது, அமெரிக்கத் தலைவர் சிலநாட்களுக்கு முன்பு வெளியிட்ட புதிய திட்டம் ஒன்றே! சூயசச் சிக்கலால் ஏற்பட்ட கொந்தளிப்பு அடங்குமுன், அமெரிக்கத் தலைவர் வெளியிட்ட அந்தத் திட்டம் உலகத்தவரை துணுக்குறச் செய்தது. இந்த அமெரிக்கத் திட்டம், மத்தியக் கிழக்கில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் வழியனுப்பு உபசாரம் நடத்திவிட்டு, அவற்றின் இடத்தில் அமெரிக்கா உட்கார நினைக்கும் திட்டம் என்ற கண்டனம் மத்தியக் கிழக்கில் குமுறி எழுந்து, எந்த ஒரு நாடும்—அது எத்தனை சிறியதானாலும்—உலகில் இதர வல்லமை வாய்ந்த நாடுகளின் ஆதிக்கத்திற்கு இரையாகிவிடுமோ என்ற அச்சம் துளியும் இன்றி சுதந்திரமாக வாழ வழி வேண்டும் என்று ஆசிக்கும் சகல விடுதலை விரும்பிகளின் உள்ளத்திலும் எதிரொலித்தது.

இந்நிலையில் எகிப்தின்மீது ஆக்கிரமிப்பு நடத்திய பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகியநாடுகளில் முன்னிரண்டும், எகிப்திற்கு ஐ. நா. படை வந்தபின் வெளியேறின: பின்னைய நாடான இஸ்ரேல் வெளியேற மறுத்து சண்டித்தனம் செய்தது. இஸ்ரேல் துருப்புகள் எகிப்திலிருந்து வெளியேறுவதைக் காலந்தாழ்த்துவதற்கு, அமெரிக்காவின் புதிய மத்தியக் கிழக்குத் திட்டமும் உதவியது என்றே அராபியர் கருதினர். இஸ்ரேல் படைகளை எகிப்திய மண்ணிலிருந்து வெளியேற்றுவது, ஐ. நா. படையின் தலைவலி தரும் மிகத் தொந்தரவான வேலையானது.

இஸ்ரேல் படைகள் தங்கள் நாட்டிலிருந்து வெளியேறும் வரை, சூயஸ் கால்வாயைச் சுத்தம் செய்து, அதனை, போக்குவரத்திற்கு இலாயக்குள்ளதாக்குவதற்கில்லை என்ற எகிப்தியரின் நிலை விளக்கத்தில் உள்ள நியாயம் தெளிவானதே.

இறுதியாக இப்போது, இஸ்ரேலிகளின் ஆக்கிரமிப்பிற்கு ஆளான காசா பகுதியில், ஐ. நா. படை பிரவேசித்துள்ளது—அதன் நிர்வாகத்தை மேற்கொள்ளுவதற்காக! காசாவிலிருந்து வெளியேற இஸ்ரேல் சம்மதித்துவிட்டது.

இதற்கிடையில், ஐ. நா. படையினர் எகிப்திய சிவிலியன்கள்மீது காரணமின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும், இது அதன் வரம்புக்கு மீறிய செயல் என்றும் கூறி, காசா பகுதியின் நிர்வாகத்தைத் தாங்களே உடனடியாக மேற்கொள்ளப் போவதாக எகிப்திய சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள். இது, ஐ. நா. மூலம் சிக்கலுக்குப் பரிகாரம் தேடி வெற்றி பெற்று வருகிறோம் என்று கூறுவோருக்கும், பொதுவாக ஏனையோருக்கும் அதிர்ச்சி தரத்தக்கதாகும். காசா பகுதியில் எகிப்திற்குள்ள ஆதிபத்திய உரிமைகளை எவரும் மறுக்கத் துணியார். ஆனால், இஸ்ரேல் படைகளை வெளியேற்றிவிட்டுச் சாதாரண கால நிலைகளை உருவாக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் ஐ. நா. படையினர், ஒரு சிறு 'தவறு' செய்துவிட்டனர் எனக் கூறி, அதனைக் காரணமாகக் காட்டி எகிப்து, அவசரமான நடவடிக்கைகள் மூலம் காசா பகுதியின் நிர்வாகத்தை உடனடியாக மேற்கொள்ள எண்ணுவது அவசரப்பட்ட முடிவு என்றே கருதப்படும்.

இந்தச் சிக்கல் இவ்வாறிருக்க, இந்தச் சிக்கலைத் தோற்றுவித்த சூயஸ் பிரச்சினை எந்த நிலையிலிருக்கிறது? சூயஸ் பிரச்சினையில் இரண்டில் ஒன்று முடிவாகும்வரை, இரண்டுங்கெட்டான் நிலை நீடிப்பதும் அதன் விளைவாகப் புதிய சிக்கல்கள் உருவாவதும் தவிர்க்க முடியாததாகும். இந்த இரண்டுங்கெட்டான் நிலை நீடிப்பதைத்தான் ஏகாதிபத்திய வல்லரசுகள் விரும்புகின்றன என்பது தெளிவு. ஆனால், ஐ. நா.-வும், அதே விருப்பமுடையதாக இருக்க முடியாது.

சூயஸ் கால்வாய் எகிப்திய சர்க்காரால் தேசியமயமாக்கப்பட்டது, முற்றிலும் நியாயமானது என்பதை, வரட்டுக் கௌரவத்திற்காகவே மேற்கு வல்லரசுகள் இன்றுவரை ஒப்பமறுக்கின்றன. கால்வாயின் உபயோகம் பற்றி, எகிப்தின் நேர்மையில் சந்தேகம் இருப்பதாகக் கூறுகின்றன. சந்தேகப்படவேண்டியது எகிப்தின்மீது அல்ல; மாறாக, எகிப்தின் நியாயமான நடவடிக்கை தங்களுக்குப் பாதகமாய் அமைந்தது என்பதால், எகிப்துமீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்த நாடுகள்தான் உலகின் திடமான—சந்தேகத்திற்கு அல்ல, கண்டனத்திற்கு ஆளானவையாகும்.

'சூயஸ் கால்வாயில் கப்பல் போக்குவரத்திற்கான கட்டணம் முழுவதையும் எகிப்திடம் தரமாட்டோம்; பாதியை வேண்டுமானால் தருகிறோம்; பாதியை ஒரு சர்வதேச நிறுவனத்திடம்தான் தருவோம்; இதற்குச் சம்மதிக்காவிட்டால் கால்வாயைஉபயோகிப்பதையே நிறுத்திக் கொள்வோம்' என்று மேற்கு நாடுகள் அடம் பிடிப்பது, வெறும் மிரட்டல்; சிக்கலுக்குப் பரிகாரம் தேடும் போக்கு அல்ல. கால்வாயை உபயோகிப்பதற்கு வசூலிக்கும் கட்டணம் நியாயமானதாயிருக்கும்படி பார்த்துக் கொள்ளுவதும் கால்வாய் அபிவிருத்தியைக் கவனிப்பதும், எகிப்தின் பொறுப்புகள். இந்தப் பொறுப்புகளை அது சரிவர நிறைவேற்றுவதாகத் தரும் உறுதிமொழிகளை, ஐ. நா. மூலம் காப்பாற்றிக்கொள்ள வாய்ப்பிருந்தும் சந்தேகங்களைக் கிளப்புவது ஏன்?

சூயஸ் சிக்கலை நீடிப்பதின் மூலம், மத்திய கிழக்கில் நெருக்கடிகளைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கவே மேற்கு வல்லரசுகள் விரும்புகின்றன என்றே, அவற்றின் இந்த சந்தேகம் கிளப்பும், காலங்கடத்தும் போக்குகள் பொருள்படும். எனவே, வீண் பிடிவாதங்களைக் கைவிட்டு, வெறும் மிரட்டல்கள் எகிப்தின் நிலையை மாற்ற முடியாது என்பதை உணர்ந்து, சூயஸ் சிக்கலைத் தீர்க்க மேற்கு நாடுகள் முன்வர வேண்டும். இதற்கு, எகிப்தின்மீது கொண்டுள்ள ஆத்திரத்தைத் தணித்துக்கொள்ளும் விசாலமான உள்ளமும் விவேகமும் வேண்டும்.

இஸ்ரேல் நாடுமீது, அராபியர் கொண்டுள்ள வெறுப்பையும் அராபியர் பற்றி இஸ்ரேல்களுக்குள்ள அச்சத்தையும் குறைத்து ஒழிப்பதற்கு மாறாக, இரு சாராரின் இரண்டு வேறு விதமான உணர்ச்சிகளையும் தூண்டிவிட்டுப் பகைமூட்டி எரிகிற வீட்டில் பிடுங்கியவரையில் இலாபம் என்ற மேற்கு வல்லரசுகளின் கீழ்த்தரமான போக்கு, நெருங்கி வரும் ஆதிக்கங்களின் இறுதியைத் துரிதப்படுத்தவே உதவுவதாகும்.

டெல்லியின் வஞ்சகத்திற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு

தென்னாட்டில் நிறுவியதை செயல்படாது செய்தனர்

அதே தொழிற்சாலையை வடநாட்டில் நிறுவுகின்றனர்

புதுடில்லி, மார்ச் 10—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், நாட்டில் இப்போது உற்பத்தி செய்யப்படுவதைவிட 4 மடங்கு அதிகமாக சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, லிக்விட் குளோரைன் போன்ற இரசாயன தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்!

1961-ம் வருடத்தில், நாடுமுழுமையிலுமாக மொத்தம் 2,50,000 டன் சோடா ஆஷ் உற்பத்தியாகும் என்று கணக்கிடப்பட்டிருப்பதாகவும் கடந்த 1955-ல், இந்த அளவு 77,270 டன்னுக மட்டுமே இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறதாம். இதுபோலவே மற்றப் பொருட்களின் உற்பத்தியிலும் பல மடங்கு அதிக உற்பத்தி காணப்படுமாம்.

இப்போது நாட்டில், 90,000 டன் சோடா ஆஷ் உற்பத்தி செய்யும் 2 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இத்தொழிற்சாலைகளில் கடந்த 1955-ல் மொத்தம் உற்பத்தியான 75,000 டன்னுக்கும் அதிகமான சோடா ஆஷில் சுமார் 72,000 டன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் என்றும் தெரிகிறது. சோடா ஆஷ் உற்பத்திச்சாலைக்கான வசதிகள்பற்றிய சர்வே ஒன்றின் அடிப்படையில் மேலும் இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட முடியும் என்றும் தெரியவருகிறது.

இந்த இரண்டு தொழிற்சாலைகளில் ஒன்று — நாளொன்றுக்கு 200 டன் சோடா ஆஷ் உற்பத்தி செய்யும் ஆற்றல்பெற்ற ஒரு தொழிற்சாலையை வடநாட்டிலுள்ள போர்பந்தரில் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டனவாம். இந்தத் தொழிற்சாலையின் துவக்க கால உற்பத்தி சக்தியான 200 டன், நாளாவட்டத்தில் நாளொன்றுக்கு 400 டன்னுக உயர்த்தப்படுமாம்.

இதுபோன்ற மற்றொருதொழிற்சாலை நிர்மாணத்திற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறதாம்.

மேலும் இப்போது நாட்டில் கனரக சோடா கிரஷ் தயாரிக்கப்படாததால், அதையும் தயாரிக்க வேறொரு தொழிற்சாலை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகள் விரைவிலேயே மேற்கொள்ளப்பட இருக்கின்றனவாம்.

காஸ்டிக் சோடா உற்பத்தி நிலையங்கள்:

இப்போது மொத்தம் வருடத்திற்கு 45,000 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இருக்கின்றனவாம். இவைகளில் சிலவற்றுக்கு, மேலும் விரிவுபடுத்திக் கொள்வதற்கான லைசென்சுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், அப்படி வழங்கப்பட்ட லைசென்சுகளின் மூலம் மொத்தமாக 1,13,000 டன் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு மேலும் 8 யூனிட்டுகள் அமைக்கப்படும் என்றும் தெரிகிறது. மற்றும் பல தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதென்ற திட்டம் விரிவான பரிசீலனையிலிருந்து வருகிறதாம்.

ஆந்திரத்தில் நடுத்தர நீர்ப்பாசன திட்டங்கள்

அமுல் நடத்த ரூ. 503 கோடி

ஐதராபாத், மார்ச் 10—

1957-ம் ஆண்டு டிசம்பர் இறுதிக்குள் ஆந்திர மாநிலத்தில் வகுக்கப்பட்டுள்ள 17 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களைத் துரிதமாக அமுல் நடத்துவதற்கு ரூ. 503 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பெண்ணாறு, இராயலபாடு, கலங்கி, சித்தல் கர்தி ஆகியவை இந்தத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

குடிபெயர்ந்தோர் சொத்துக்கள்

இந்தியாவுக்கு ரூ. 16 - இலட்சம்

புதுடில்லி, மார்ச 11—

குடிபெயர்ந்தவர்களின் அசைநிலை சொத்துக்களை விற்பனை செய்துவிடுவது என்ற இந்திய-பாகிஸ்தான் ஒப்பந்தம் ஒன்றின் மூலம், பாகிஸ்தானிலிருந்து இந்தியா ஓடிவந்துள்ள அகதிகளின் சொத்துக்களை விற்பனை செய்ததையொட்டி, இந்திய சர்க்காருக்கு பாகிஸ்தான், ரூ. 16 இலட்சம் தரவேண்டியிருப்பதாகவும், இதில் ஏற்கனவே ரூ. 10,35,000 பாங்கிகள் மூலம் இந்திய சர்க்கார் பெற்றுவிட்டதாகவும், மீதியிருக்கிற தொகையும் விரைவில் கிடைத்துவிடலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிகிறது.

வடக்கில் உருவாகிவரும் உருக்குத் தொழிற்சாலை

நிர்மாண வேலைகள் துரிதமாக நடைபெறும் விவரம்

புதுடில்லி, மார்ச் 12—

ரஷ்ய சர்க்காரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட இருக்கும் பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்கான நிர்மாண வேலைகள் தீவிரமாக முன்னேறிவருவதாகவும், இந்தத் தொழிற்சாலை, 1958-ம் வருடத்தில் உற்பத்தி துவங்கும் என்றும், 1959-ல் முழு உற்பத்தி சக்தியுடன் தொழிற்சாலை இயங்கும் என்றும் தெரிகிறது.

இத்தொழிற்சாலைக்குத் தேவையான சுமார் 16,000 டன் எடை மதிப்புள்ள இயந்திரச் சாமான்கள் போன்றவை இதுவரை சோவியத் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

இத்தொழிற்சாலைக்கான நிலமும் அதையொட்டிய நகரத்திற்குமான இடங்களெல்லாம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும், இந்த இடங்களுக்குத் தண்ணீர் வசதிக்காகத் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும், மேலும் நிரந்தரத் தண்ணீர் விநியோக ஏற்பாட்டுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இதுவரை வந்துள்ள சாமான்கள் தவிர மற்றும் பல சாமான்களுக்காக மேலும் பல சோவியத் நிறுவனங்களிடமிருந்து ரூ. 67,50,00,000-க்குக் காண்டிராக்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது. இத்தொழிற்சாலை நிர்மாணம் சம்பந்தப்பட்ட மற்ற சில வேலைகள்—அதாவது நிலத்தை சமநிலைப்படுத்தல், கற்பாறைகளை உடைத்தல், செங்கல் அறுத்தல், உருக்குத் தூண்களை நாட்டுவது போன்ற வேலைகளை மேற்கொண்டதற்கான காண்டிராக்டுகள் ஏற்கனவே முடிவு பெற்றுவிட்டனவாம்.

பிலாய் இருப்புப் பாதை நிலயத்திலிருந்து இத்தொழிற்சாலை அமைக்கப்பட இருக்கும் பகுதிகளுக்கு தண்டவாளங்கள் போடப்பட்டுவிட்டதால் இப்போது, தேவையான சாமான்கள், இயந்திரச் சாதனங்கள் அனைத்தும் மிக எளிதில் இப்பகுதிகளுக்குக் கொண்டுவரப்படுகின்றனவாம்.

இத்தொழிற்சாலையொட்டி அங்கு ஒரு நகரத்தையும் நிர்மாணிக்க ஏற்பாடாகியிருக்கிறது. அந்த ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக 225 நிரந்தரக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுவிட்டனவாம். திட்டமிடப்பட்டுள்ளபடி, இவை அவசர உபயோகத்திற்காகக் கட்டிமுடிக்கப்பட்டுள்ளனவென்றும், மற்றவைகளையும் கட்டிமுடிக்கும் வேலை சீக்கிரமே முடிவுறும் என்றும் தெரிகிறது. வருகிற நிதி ஆண்டில் 1957—58-ல், இந்தத் திட்டத்திற்காக ரூ. 63,30,00,000 செலவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த நிதி ஆண்டில் 1956—57-ல், இத்திட்டச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகையைவிட இத்தொகை $3\frac{1}{2}$ மடங்கு அதிகமானதாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தொழிற்சாலை 7,70,000 டன் தண்டவாளங்கள் கனரக மத்தியரக சாதனங்கள் மற்றும் உருக்குக் கம்பிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் என்றும், இத்துடன் விற்பனைக்காக சுமார் 3,00,000 டன் இரும்பு உற்பத்தி செய்யும் என்றும் தெரிகிறது.

அண்ணாவின் வெற்றிதரும் மகிழ்ச்சிப் பெருக்கு

நாடெங்கிலும் கொண்டாட்டம்

அண்ணா அவர்களது வெற்றி கேட்டு, தமிழகத்தின் பல இடங்களிலும் மகிழ்ச்சிப்பெருக்கின் காரணமாகப் பாராட்டு ஊர்வலங்களும், கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன; அவைகளின் விவரம் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது :—

இலங்கை :

அண்ணா அவர்களின் தேர்தல் முடிவை அறிவதற்காக இலங்கை மாநகரின் வீதிகளில் மக்கள் வெள்ளப்பெருக்கென திரண்டிருந்தனர். இரவு 11 மணியளவில் அண்ணாவின் வெற்றிச் செய்தியை கேட்டதும் அனைவரும் பெருமகிழ்ச்சியுற்றனர். இலங்கைவாழ் திராவிடர்களின் சார்பில் அண்ணா அவர்களை வாழ்த்தி தந்தி ஒன்றும் காஞ்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப் பட்டது.

திருப்பெயர் :

திருப்பெயர், குரும்பலூர் ஆகிய கிராமங்களின் தி. மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அண்ணாவின் உருவப்படத்தை சைக்கிளில் அழகாக அலங்கரித்து மேள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக குரும்பலூர், பாளையம், திருப்பெயர், பெரம்பலூர் ஆகிய ஊர்களின் முக்கிய வீதிகளில் வலம் வந்தனர். ஊர்வலத்தில் ஏராளமான பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டனர்.

எலப்பாக்கம் :

8—3—57 மாலை 6 மணிக்கு, எலப்பாக்கம் கிராமத்தில் அண்ணா அவர்களின் உருவப்படத்தை அழகுடன் அலங்கரித்து, உதய சூரியன் ஒளிவீசுவதுபோல் அமைத்து ஊர்வலமாக கழகத் தோழர்கள் கொடிகளுடன் முன் செல்ல ஏராளமான பொதுமக்களுடன் முக்கிய வீதிகளின் வழியே வலம் வந்தனர். ஊர்வலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர். இரவு 11 மணிக்கு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பனங்குளம் :

8—3—57 மாலை 6 மணிக்கு பனங்குளத்தில் அண்ணா அவர்களின் வெற்றி விழா திரு. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் அண்ணாவின் வெற்றி குறித்துப் பேசினர். கூட்டத்திற்கு ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கு வந்த அனைவருக்கும் பாயசம் வழங்கப் பட்டது.

இரட்டணை :

8—3—57 மாலை 6½ மணிக்கு இரட்டணை கடைத் தெரு சந்திப்பிலிருந்து அண்ணாவின் உருவப் படத்தை அலங்கரித்து முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்றும், எல்லா வீடுகளுக்கும் இனிப்புகள் வழங்கியும் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றிரவு கடைத் தெருவில் தோழர் ப. கோவிந்தராசன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சா. இராமானுசம், இர. பாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

நல்லூர் :

8—3—67 இரவு 8 மணிக்கு நல்லூரில் தி. மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் ஊர் பொது மக்களும் அண்ணா அவர்களின் வெற்றியை மகிச்சியுடன் விழாக் கொண்டாடினர். அண்ணாவின் உருவப்படத்தை அழகுடன் அலங்கரித்து தோழர் கே. சுப்புராயன் தலைமையில் ஏராளமான பொதுமக்கள் திரள ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

வடக்குப்பட்டி :

8—3—57 மாலை 5 மணியளவில் வடக்குப்பட்டி ஊராட்சி மன்ற சிறுவர் விளையாட்டுப் பூங்காவில் அண்ணாவின் வெற்றியை தோழர் கு. சதாசிவம் தலைமையில் கொண்டாடப்பட்டது. சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் இனிப்புகள் வழங்கப் பட்டது.

திருவில்லிப்புத்தூர்

7—3—57 இரவு 11 மணிக்கு, திருவில்லிப்புத்தூரில் அண்ணா அவர்களின் வெற்றிச் செய்தியைக் கேட்டு ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும் பொதுமக்களும் அண்ணாவின் உருவப் படத்தை மாலைகளால் அலங்கரித்து வாழ்த்தொலிகள் விண்ணதிர—வாண வேடிக்கைகளும் அதிர்வேட்டுகளும் முழங்க இரவு 1-30 மணி வரை நகர்வலம் வந்தனர். அதிர்வேட்டுகளை விடியும் வரை வெடித்துக்கொண்டேயிருந்தனர்.

மேலூர்

8-3-57 இரவு 7-30 மணிக்கு, மேலூரில் அண்ணா அவர்களின் தேர்தல் முடிவு பற்றி அறிய பொதுமக்கள் ஆவலாய் திரண்டிருந்தனர். மக்களின் ஆவல் அதிகமாகவே மதுரை தி. மு. கழகத்திற்கு 'டிரங்போன்' மூலம் செய்தியறிய, அங்கு குழுமியுள்ள மக்களிடம் பணம் திரட்டினர்; ரூ. 13 வசூலாயிற்று. பின்னர், மதுரை தி. மு. கழகம் மூலம் அண்ணாவின் வெற்றி அறிவிக்கப் படவே பொதுமக்கள் எல்லையற்ற மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். மேலூர் 'திராவிட நாடு' விற்பனையாளர் தோழர் முத்து தன் கடையிலிருந்து பொதுமக்களுக்கு மிட்டாய்களும், சோடா, கலர், வாழைப் பழங்கள் இலவசமாக வழங்கி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டார். மறுநாள் மாலை ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

கன்னுரபாளையம்

கன்னுரபாளையம் தி. மு. கழக ஆதரவாளர்கள் அண்ணா அவர்களின் வெற்றிச் செய்தியைக் கேட்டு மகிழ்ந்து, ஊர் முழுமையிலும் அறிவித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி வெற்றி விழா கொண்டாடினர்.

புதுவை :

7—3—57 இரவு 7-மணிக்கு புதுவை பொதுமக்கள் அண்ணா அவர்களின் வெற்றியை 'டிரங்க் டெலிபோன்' மூலம் அறிந்ததும் பெருமகிழ்ச்சியடைந்தனர். கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் ஆங்காங்கே தம் மகிழ்ச்சிக் சறிகுறியாக இனிப்புகள் வழங்கியும் விருந்துமுறை நடத்தியும் வெற்றிவிழா கொண்டாடினர்.

காதக்கோட்டை :

காதக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்ணாவின் வெற்றிவிழா விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அண்ணாவின் உருவப் படத்தை சைக்கிளில் அலங்கரித்து தோழர் கன்னிவாடி கே. எஸ். எஸ். பெரியார் தலைமையில் ஊர்வலமாக மூலனூர், மொங்க நல்லாம்பாளையம் ஆகிய ஊர்களின் முக்கிய வீதிகளில் வலம் வந்தது. மாலை 6 மணியளவில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

வெங்கல் :

8—3—57 காலை 8-மணிக்கு வெங்கல் கிராம திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களும் ஆதரவாளர்களும் அண்ணாவின் வெற்றியைக் கேட்டு மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர். தோழர்களுக்கு தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

மறுநாள் இரவு 8 மணிக்கு அண்ணாவின் உருவப்படம் அலங்கரிக்கப்பட்டு தோழர் முத்தம்பி தலைமையில் ஊர்வலமாக செல்லப்பட்டது. ஊர்வலத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டதும், சிலம்ப விளையாட்டுகள் பங்கேற்றதும்சிறப்பாக இருந்தது ஆங்காங்கே பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

நகரி-புதுப்பேட்டை

நகரி-புதுப்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அண்ணாவின் வெற்றியை அறிந்து பெருமகிழ்வுடன் அண்ணா உருவப்படத்துடன் ஊர்வலம் வந்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் வெற்றிவிழா கொண்டாடினர். ஊர்வலத்தில் ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர்.

பெரிய கொழப்பலூர் :

9—3—57 இரவு 7-மணிக்கு பெரிய கொழப்பலூர் தி. மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அண்ணா வெற்றி விழாவை மேளவாத்தியங்கள் முழங்க, கழகக் கொடிகள் ஏந்தியவண்ணம் ஊர்வலமாக வந்து சிறப்பாகக் கொண்டாடினூர்கள்.

தோல்வி ஏற்படுவதற்கு வழியே கிடையாது!

சிங்கப்பூர் முதலமைச்சர் எச்சரிக்கை

சிங்கப்பூர், மார்ச் 12—

"சிங்கப்பூருக்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பணியில் பிரிட்டனும் சிங்கப்பூரும் செய்துவரும் புதிய முயற்சியில் தோல்வி ஏற்படுவதற்கு வழியே கிடையாது" என்று, சிங்கப்பூர் முதன் மந்திரி திரு. லிம் இவ் ஹாக் கூறியுள்ளார்.

ஒரு புதிய அரசியல் அமைப்பிற்காக நடக்கும் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக் கட்டத்தில் இவ்வாறு தோல்வியடையவிடக் கூடாது என்பதை வற்புறுத்தி அவர் எச்சரித்துள்ளார்.

அன்பளிப்புகள்

4—3—57 அன்று ஆமதாபாத் சமால்பூர் தி. மு. கழகத் தோழர் கே. அப்பையன் அவர்கள் துணைவியார் தோழியர் விஜயா அவர்கள் பெண் மகவு ஒன்றுக்குத் தாயானர். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

3—3—57 அன்று புதுவை இலாசப்பேட்டை தோழர் இராச. சண்முகம் அவர்கள் துணைவியார் ஆண்மகவு ஒன்றுக்குத் தாயானர். குழந்தைக்கு இளங்கோ எனப் பெயரிட்டதின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1. அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

தென்னார்காடு மாவட்டம் இரட்டணை தோழர் இர. பாலகிருட்டிணன் அவர்களது ஆண் மகவுக்கு 'வீர கேசரி' எனப் பெயரிட்டதின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம் :

இரண்டாண்டுகளுக்கு முன்பு அம்பலமான ஓட்டுப் பெட்டிகளின் இலட்சணம்!

இன்றும் நிலை மாறுதது ஏன்?

ஐயா,

தேர்தலின்போது நேர்மையான முறையில் ஓட்டுப் பெற்று வெற்றியடைவதென்பது காங்கிரஸ்காரர்களால் முடியாததாகி விடுகிறது. மக்களிடம் தம் கட்சியின் மதிப்பைக் காத்துக்கொள்ள வேண்டி பல தில்லுமுல்லுகளை அவர்கள் கையாள முற்படுகிறார்கள். தங்களுக்கிருக்கும் அதிகாரத்தைப் பிரயோகித்தும் பணத்தைக் கொடுத்தும் மற்றும் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டும் வெற்றிபெறப் பார்க்கிறார்கள். இவற்றாலும் முடியாவிட்டால், எதிர்க்கட்சிக்காரர்களின் வாக்குப் பெட்டிகளிலுள்ள வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குக் களவு முறையைக் கையாளுகிறார்கள். எடுத்துக் காட்டாக இப்போது நடைபெறும் தேர்தல்களில் பல இடங்களில் எதிர்க்கட்சியினரின் வாக்குப் பெட்டிகள் உடைத்திருப்பதும், வாக்குகள் மாறியிருப்பதும் எடுத்துக் காட்டப்பட்டுவருகின்றன.

ஒட்டுப் பெட்டியில் 'சீல்' வைத்திருந்தாலும், அந்தச் சீல் சீர்குலையாமல் அப்பெட்டியைத் திறந்து மூட முடியும். உதாரணமாக சென்ற 1955-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் புதுவையில் நடைபெற்றத் தேர்தலின்போது, இந்தச் சூழ்ச்சிமுறை வெட்டவெளிச்சமாக்கப்பட்டது. அதாவது வாக்குகள் எண்ணும் போது (ஜூலை 26-ந் தேதி) மேசை மீதிருந்த ஒட்டுப் பெட்டி ஒன்று கீழே விழுந்து திறந்துகொண்டது. அதிலுள்ள வாக்குச் சீட்டுகள் வெளியே சிதறின. சிதறிய வாக்குகளை மீண்டும் பெட்டிக்குள் இட்டுப் பழையபடி பெட்டியை மூடிவிட்டார்கள். வைத்திருந்த சீலும் கையொப்பமிட்ட தாளும் சீர்குலையாமலிருந்தன!

அத்தேர்தலில் அபேட்சகராக நின்று வெற்றி பெற்ற திரு. சவரி என்பார் இதைக் கண்ணுற்றதும், இப்பெட்டிகளில் வைக்கப்பெறும் 'சீல்' சீர்குலையாமல் திறந்து வாக்குகளை விருப்பம்போல் களவாட முடியும் என்றும், மீண்டும் எவ்விதச் சீர்குலைவுமில்லாமல் மூடிவிட முடியுமென்றும் தெரிவித்தார். இதைக் கேட்டதும், அங்கிருந்தோர் ஆச்சரியப்பட்டனர். உடனே அவர், பெட்டியின் மேற்புறமுள்ள கைப்பிடியை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு, மறு கையால் பக்கவாட்டில் ஒரு குத்துக் குத்தினர். பெட்டி திறந்துகொண்டது — மீண்டும் மூடிக்காட்டினர் — வைத்த சீல் முதலியவை சீர்குலையவில்லை!

இதேமுறையில், ஒரு பெட்டி மட்டுமல்ல—பல பெட்டிகளைத் திறந்து மூடிக்காட்டினர்! தேர்தல் அதிகாரி ஆச்சரியத்துடன் இதனை மேலதிகாரிக்குத் தெரிவித்தார். ஆனால், அதற்கு விமோசனம் ஏற்படவில்லை.

இந்தக் கள்ளப்பெட்டியின் உதவிகொண்டுதான், பல இடங்களில் காங்கிரசார் வெற்றிபெற ஏதுவாயிற்று என்று, அப்பொழுது புதுவை மக்களிடையே பெரும்பரபரப்பான பேச்சாயிருந்தது. இதை மீண்டும் மெய்ப்பிக்கும் வகையிலேயே இப்பொழுது நடைபெறும் தேர்தலில் பல இடங்களில் வாக்குப் பெட்டிகள் இருந்து வருகின்றன.

புதுவை-சிவம்
புதுவை.

8 வருடம் போராடிய நீக்ரோ ஆசிரியர்

வெள்ளையர் கல்லூரியில் அனுமதிப்பதற்கு உயர் நீதிமன்றத்தின் மறுப்பு

ஹாக்கின்ஸ் என்ற நீக்ரோ ஆசிரியர் ஒருவருக்கு பிளோரிடா சட்டக் கல்லூரியில் இடம் கிடையாதென மறுத்து பிளோரிடா உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

இவர், கடந்த 8 வருட காலமாக வெள்ளையருக்கான மேற்படி கல்லூரியில் தமக்கு இடந்தருமாறு கோரிப் போராடிவந்திருக்கிறார்.

முன்னர் ஒருமுறை இவர் பிளோரிடா உயர் நீதிமன்றத்திற்கு இது குறித்து மனுச் செய்தபோது அந்த நீதிமன்றம் அவரது கோரிக்கை மறுத்ததையொட்டி அமெரிக்கா உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொண்டார். அந்த அப்பீலின் மீது தீர்ப்பளித்த அமெரிக்கா உயர் நீதிமன்றம், அவருக்கு உடனடியாக அந்தக் கல்லூரியில் இடந்தரப்படவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவைத்தொடர்ந்து மேலும் பிளோரிடா நீதிமன்றம் அவ்வழக்கை ஒருவருடம் கழித்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது தனது முன்னைய தீர்ப்பை உறுதி செய்து தீர்ப்பளிக்கையில், ஒரு சுதந்திர நாட்டின் உயர் நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை குறிப்பிட்ட ஒரு நாளுக்குள் அமுல் செய்யவேண்டும் என்று அமெரிக்க உயர் நீதிமன்றம் வரையறை செய்வது முடியாது ஒன்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த முடிவுக்கு 5 பேர் தங்கள் ஆதரவையும் இரண்டு பேர் தங்கள் எதிர்ப்பையும் தெரிவித்திருக்கின்றனராம்.

பாகிஸ்தானுக்கு

வெளிப்படையான அறிவிப்பு?

கான்பெர்ரா, மார்ச் 12—

இங்கு இன்று ஆரம்பமாகும் 'சீட்டோ' மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினை எழுப்பப்படுமானல் அது வன்மையாக எதிர்க்கப்படும் என்று பாகிஸ்தானுக்கு ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் வெளிப்படையாக அறிவித்துவிட்டிருப்பதாகத் தெரிகிறதாம்.

ஜப்பானில் பல்லாயிரம் தொழிலாளர் வேலைநிறுத்தம்

டோக்கியோ, மார்ச் 11—

ஜப்பான் முழுமையிலுமுள்ள முக்கியத் தொழிற்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள்—16,000-த்திற்கும் மேற்பட்ட நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தங்களின் ஊதிய உயர்வு, மற்றும் வேலை சம்பந்தமான வசதிகள் ஆகியவற்றைக் கோரி வேலைநிறுத்தம் செய்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் காரணமாக ஜப்பான் முழுமையிலுமுள்ள இயந்திரத் தொழில்களும் வியாபாரத்துறையும், இரயில் போக்குவரத்தும் தடைபட்டுவிட்டனவென்றும் இரயிலின் தடைப்பாடு காரணமாகவும் இரயில்களை வேண்டுமென்றே மெதுவாக விடுவதினாலும் அலுவலகங்களில் பணிபுரியும் எண்ணற்றவர்கள் குறித்த காலத்திற்குள் தமது அலுவலகங்களுக்கு வரமுடியவில்லை என்றும் இரயில்களில் கூட்ஸ் மூலம் அனுப்பவேண்டிய பொருட்கள் பெருமளவில் குவிந்துக் கிடக்கின்றனவென்றும் தெரியவருகிறது.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் இரயில்களுக்கு நிலக்கரிப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாம்!

'ஆளும் கட்சிக்கு எதிர்கட்சி அவசியம்'

'எதிர்க் கட்சியாகப் பணியாற்ற தி. மு. கழகமே தகுதி பெற்றது'

திரு. பி. டி. இராசன் கருத்துரை

மதுரை—

"பாராளுமன்ற முறைப்படி ஆளும் கட்சிக்கு எதிராக வலிவுள்ள எதிர்க்கட்சி ஒன்று இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்; அப்போதுதான் அமைச்சரவை நன்கு வேலை செய்ய முடியும். இன்று நாட்டிலுள்ள பொதுவுடைமைக் கட்சியோ, சோஷலிஸ்டுக் கட்சியோ, தமிழரசுக் கழகமோ மற்ற கட்சிகளோ காங்கிரசிலிருந்து வெளிவந்தவைகளாகும்: அமைச்சர்களுடன் அரசியல் பேரம் பேசி அதில் வெற்றி பெற்ருல், அந்தக் கட்சிகளெல்லாம் காங்கிரசுடன் கலந்துவிடும். ஆனல், அமைச்சர்களுடன் பேரம் பேசக்கூடியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அல்ல; தி. மு. கழகம் உருவத்தில் சிறியதாயிருந்தாலும் சனநாயகப் பற்றுக்கொண்டதாகும்; ஆகவே, தி. மு. கழகம் சட்டசபைக்குச் சென்ருல், சட்டசபை ஒழுங்காக நடப்பதுடன் அமைச்சர்களும் நல்ல முறையில் பேசுவார்கள். தி. மு. கழகத்திலிருந்து ஐந்து பேர்கள் சட்டசபைக்குச் சென்ருலும் திறமையுடன் செயல் புரிவார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்,"

என்று, 8—3—57 அன்று மதுரையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில், திரு. பி. டி. இராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

"கம்பம், கூடலூர், உத்தமபாளையம், சின்னமனூர் என்ற நான்கு மேஜர் பஞ்சாயத்துப் போர்டுகள் கம்பம் தொகுதியில் இருந்துவந்தன. இதில் இணைந்திருந்த சின்னமனூரைப் பிரித்துவிட்டிருக்கின்றனர். என்னுடைய கவனக் குறைவும் இதற்குக் காரணம் என்ருலும், கொள்கை, கோட்பாடு அனைத்தையும் மீறிக் காங்கிரசார் நடக்க முனைந்துவிட்டனர்.

"மதுவை ஒழித்த காங்கிரசுக்கு வாக்குகளைத் தருமாறு கேட்டு வந்த காங்கிரசார், மதுவருந்தியவாறே தேர்தல் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இராசப்ப நாயக்கனூரில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் அவர்கள் நடந்துகொண்ட விதமே போதுமான சாட்சியாகும்.

"மிதமிஞ்சிய குடிபோதையில் இருந்த ஒருவர், 'இந்த ஊருக்குள் வராதே போ' என சப்தமிட்டவாறு கோல்கொண்டு தாக்க முன்வந்தார். பல்வேறு சாதியினரைக் கொண்ட உத்தமபாளையம் தொகுதியில் எனக்கு தேர்தல் வேலை செய்ய முன்வந்த சில சமூகத்தினரை அச்சுறுத்தியுள்ளனர்.

"உத்தமபாளையத்திலும், சேலம் போன்ற இடங்களிலும் பணத்தைக் கொண்டு ஓட்டுகளைப் பெற்றுள்ளனர்: நல்லவர்கள் சட்டசபையில் இருக்கமுடியாத நிலையை காங்கிரசார் ஏற்படுத்திவிட்டனர். இது மிகவும் வருந்தத்தக்கது. ரூ. 30 இலட்சம் மூலதனத்தைக்கொண்டு இத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றுள்ளது: கொள்கையினுல் அல்ல—பணத்தால்!

"காந்தியடிகள் அகிம்சை, நாணயம், நேர்மை, சத்தியம் இவைகளை நிலைநிறுத்தப் போராடி வந்தார்; அவர் இன்று இருந்திருப்பாரேயானுல், 'இவ்வளவு கேவலமான நிலைக்கு வந்துவிட்ட காங்கிரசை ஏன் வளர்த்தோம்?' என்று வேதனைப்பட்டிருப்பார்.

"நன்கு வாதாடக்கூடியவர்களையும், சனநாயகத்தை அறிந்தவர்களையும் இன்றையத் தேர்தலில் வெற்றி பெறவிடாமல், சாதிய முறையைத் தூண்டிவிட்டு குறிப்பிட்ட ஒரு இனத்தார் ஓட்டளிக்காதபடி காங்கிரசார் தடுத்துவிட்டனர்; சேலம், உத்தமபாளையம் தேர்தல்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். காங்கிரசுக்காரர்கள் சாதி, பணம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் வெற்றி பெற்று வருகிருர்கள்."

இறுதியாக திரு. பி. டி. இராசன் அவர்கள் 'என்னுடைய தோல்வியைக் குறித்து நான் வருத்தப்படவில்லை; எந்தவிதப் பலனையும் எதிர்நோக்காது எனக்காக ஆயிரக்கணக்கான மக்கள் ஓட்டளித்திருக்கின்றனர்; அவர்களுக்கு எனது நன்றியை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்' என்றும் குறிப்பிட்டார்.

தமிழகத் தேர்தல் நிலவரம்

மேலும் சில தொகுதி முடிவுகள்

★

தேர்தல் முடிவுகள் குறித்து மேலும் சில இடங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

தென் சென்னையில் தியாகராயநகர் தொகுதியில் காங்கிரஸ் கட்சிச் சார்பில் போட்டியிட்ட கே. விநாயகம், நமது கழக அபேட்சகர் தோழர் எ. எஸ். ஜெகபாதம் அவர்களைவிட சுமார் 4,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தோழர் எ. எஸ். ஜெகபாதம் அவர்களுக்கு 12,170, வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 16,613 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

பட்டுக்கோட்டை தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர், கழக அபேட்சகர் வி. அருணசலம் அவர்களைவிட 8,000-த்திற்கும் குறைவான வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிருர். கழக அபேட்சகருக்கு 16,435 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 24,237 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

மற்றும் அரூர் இரட்டைத் தொகுதியிலும் கழக அபேட்சகர்களைவிட அதிகம் வாக்குகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிவகங்கை தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 24,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் தோழர் டி. சுப்பிரமணிய ராஜ்குமார் வெற்றி பெற்றிருக்கிருர். தி. மு. கழக அபேட்சகர் தோழர் வீரப்பன், கம்யூனிஸ்டு அபேட்சகர், மற்றும் இரு சுயேச்சைகளும் தோல்வியுற்றிருக்கின்றனர்.

கழகம் போட்டியிடாத மற்ற சில தொகுதிகளுள் பரமக்குடி தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 11,000 வாக்குகளுக்கும் அதிகமாகப் பெற்று காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் தோழர் கே. இராமச்சந்திரன் வெற்றிபெற்றிருக்கிருர்.

உசிலம்பட்டித் தொகுதியிலும் காங்கிரஸ் அபேட்சகரை விட சுமார் 20,000 வாக்குகளுக்கும் அதிகமாகப் பெற்று தோழர் கே. மூக்கையா அவர்கள் வெற்றி பெற்றிருக்கிருர்.

மற்றும் தென்சென்னை மைலாப்பூர் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர், பி. சோ. கட்சி அபேட்சகர் தோழியர் விசயலட்சுமியைவிட சுமார் 4,000-த்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றிருக்கிருர்.

ஈரோடு தொகுதியில், கம்யூனிஸ்டுக் கட்சிச் சார்பில் போட்டியிட்ட கே. டி. ராஜு அவர்களைவிட சுமார் 3,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றிருக்கிருர்.

மதுரை கிழக்கு தொகுதியிலும், கம்யூனிஸ்டு அபேட்சகர் என். சங்கரையாவைவிட காங்கிரஸ் அபேட்சகர் சுமார் 4,000-த்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றிருக்கிருர்.

மற்றும் ஏற்காடு இரட்டைத் தொகுதி, ஒட்டன்சத்திரம் தொகுதி ஆகியவைகளிலும் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கதையாக இருந்தது சாதனையாகப் போகிறது

இரஷ்யா முழுமைக்கும் ஒரே மின்சார நிலையம்

மாஸ்கோ, மார்ச் 13—

உலக நிலப் பரப்பின் ஆறில் ஒரு பகுதியான ரஷ்யா முழுமைக்குமான ஒரு தனி மின்சார உற்பத்தி இயங்கு நிலையத்தைக் காண ரஷ்யா திட்டமிட்டிருக்கிறதாம்!

இந்த மின்சார நிலையம், இப்போது ரஷ்யா முழுமையிலுமுள்ள பல்வேறு மின்சார நிலையங்களையும் — அதாவது, தண்ணீர், நிலக்கரி முதலியவற்ருல் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் நிலையங்களையும், அணு சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தியாகும் நிலையங்களையும் இணைத்து ஒரே மின்சார நிலையமாக அமையுமாம்.

இது, விஞ்ஞான நாவல்களில் தான் சாத்தியம் என்றிருந்தது போக இப்போது, உண்மையில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் ஒரு பெரும் சாதனைக்கான முயற்சி என்ற கட்டத்திற்கு வந்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, ரஷ்யாவில் உள்ள நூற்றுக் கணக்கான நீர் நிலக்கரி மின்சார உற்பத்தி நிலையங்கள் ஒரே நிலையத்தில் இணைக்கப்பட்டு ஒன்று அல்லது பல இடங்களிலிருந்து இயக்குவிக்கப்படுமாம்!

சட்ட மந்திரி தோல்வி!

பெங்களூர், மார்ச் 12—

மைசூர் மாநில சட்டசபைக்கு தும்கூர் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்ட மாநில சட்ட மந்திரி திரு எம். வி. இராமராவ் தோல்வியடைந்தார்.

யுத்தமா? அல்லது ஐ. நா. தீர்ப்புக்கு மதிப்பா?

மிரட்டிப் பார்க்கிருர் பாகிஸ்தான் மந்திரி

லாகூர், மார்ச் 12—

"ஒன்று, இந்தியா கம்யூனிஸ்டு நாடுகளின் கூட்டத்திடம் சென்று, அவைகளிடமிருந்து ஆயுதம் பெற்று பாகிஸ்தானுடன் போரில் ஈடுபட வேண்டும்; அல்லது ஐக்கிய நாடுகளின் ஒப்பந்த விதிகளில் கூறப்படுவதுபோல் காஷ்மீர் எதிர்காலம் குறித்து காஷ்மீர் மக்களே நிர்ணயம் செய்துகொள்ளவேண்டும் என்று சுய நிர்ணய உரிமையை வழங்க வேண்டும். இந்தியாவின் வெளிவிவகாரத் துறை கொள்கையில், இந்த இரண்டில் ஏதேனும் ஒன்று பற்றிய தனது முடிவை வெளிப்படையாகத் தெரிவித்தாக வேண்டும்,"

என்று, பாகிஸ்தான் வெளிநாட்டு விவகாரத் துறை அமைச்சர் பிரோஸ்கான் நூன், இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டாராம்.

மேலும் அவர் பேசுகையில், 'காஷ்மீர் பற்றிய இந்த விவகாரத்திற்கு ஒரு சரியான மாற்று யோசனை, கம்யூனிஸ்டுக் கூடாரத்திலுள்ள இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே யுத்தம் நடைபெறுவது ஒன்றேதான்' என்றும் குறிப்பிட்டாராம்.

'ஆனல், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே யுத்தம் நடைபெறுமானல் மிக அரும்பாடுபட்டு சுதந்திரம் பெற்ற இரு நாடுகளுக்குமே பெருத்த அபாயம் நேரிடும்,' என்றும் வேறு அவர் கூறியிருக்கிருராம்!

அண்மையில் உருவாக்கப்பட்ட 'காஷ்மீர் எதிர்ப்பு இயக்கம்' ஒன்று குறித்தத் தமது கருத்தை அவர் தெரிவிக்கையில், 'அணுகுண்டு போன்ற ஆயுதங்களைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும் பிரிட்டனின் ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்வதற்கென சைப்ரஸ் மக்கள் நடத்திவரும் சுதந்திரப் போராட்டங்களைப்போல காஷ்மீர் மக்களும் செய்ய முடியும்; ஆனல் இப்போது காஷ்மீர் மக்களெல்லாம், இந்த விவகாரத்தில் ஐ. நா.-வின் தீர்ப்பு என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே காத்திருக்கின்றனர். ஐ. நா.-வின் தீர்ப்பு சரியான முறையில் அமைந்திராவிட்டால், காஷ்மீர் மக்கள் பிறகு இன்னதுதான் செய்வர்—இன்னதுதான் நடக்கும் என்பதை சொல்ல முடியாது' என்றும் குறிப்பிட்டாராம்.

'இனிமேலும் இந்த விவகாரத்திற்குத் தகுந்த பரிகாரம் காண நாங்கள் இன்னும் சில ஆண்டுக்காலம் பொறுத்திருந்தாலும் பொறுத்திருப்போம்; ஆனல் வேறு எந்த ஒரு உடன்படிக்கைக்கும் இனி ஈடுபடத் தயாராக இல்லை' என்று குறிப்பிட்டுவிட்டு அவர், 'காஷ்மீர் விவகாரத்தை சுமூகமான முறையிலேயே தீர்த்துக்கொள்ளத்தான் விரும்புகிறது; நமது அண்டை நாடான—நட்புக்குரிய நாடான இந்தியாவை இவ்விஷயத்தில் தொந்திரவு செய்யவேண்டாம் என்றே பாகிஸ்தான் பத்திரிகைகளையும் அரசியல் வட்டாரங்களையும் கேட்டுக்கொண்டிருக்கிருேம்' என்றும் அவர் அறிவித்தாராம் அக்கூட்டத்தில்!

★

வெறிகொண்டோருக்கு கான்சாகிப் புத்திமதி

லாகூர், மார்ச் 11—

"காஷ்மீர் விவகாரத்தில் வெற்றி பெறுவதற்கு, ஐ. நா.-வை எதிர்பார்த்திருப்பதைவிட மக்கள், தங்களுடைய தன்னம்பிக்கையை விருத்தி செய்துகொள்ள வேண்டும்,"

என்று, மேற்குப் பாகிஸ்தான் முதலமைச்சரான டாக்டர் கான் சாகிப், இங்கு நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

"இந்தியர்கள் நமது சகோதரர்கள்; நாம் அனைவரும் தோளோடு தோளாக நின்று சுதந்திரத்திற்காகப் போராடினேம். எனவே, நம்மிடையே உள்ள இந்தத் தகராறுக்கு நாம் சுமூகமான முறையிலேயே பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும்; காஷ்மீர் குறித்த வருங்காலத்தை காஷ்மீர் மக்களே நிர்ணயித்துக்கொள்ள விட்டுவிட வேண்டும்"

என்றும் குறிப்பிட்டு விட்டு, மேலும் அவர், பாகிஸ்தான் சில இராணுவ ஒப்பந்தங்களில் அங்கம் வகிப்பதைக் கண்டிக்க இந்தியாவிற்கு உரிமை இல்லை என்பதைச சுட்டிக் காட்டிப் பேசுகையில், 'ஒவ்வொரு சுதந்திர நாடும், தான் விரும்புகிற எந்த ஒரு உடன்பாட்டுக்கும் தன்னை ஆட்கொள்ள உரிமை படைத்திருக்கிறது; காஷ்மீர் பரிகாரத்திற்கும், பாகிஸ்தானின் இராணுவக் கூட்டு ஒப்பந்தத்திற்கும் தொடர்புப்படுத்தி விவாதிப்பது சரியல்ல' என்றும் குறிப்பிட்டாராம்.

வடசென்னை தொகுதியில் போலீசார் ஒருதலைப்பட்ச நடவடிக்கை?

கடந்த 8-ந் தேதியன்று நடைபெற்ற தேர்தலின்போது வடசென்னைத் தொகுதியில் பல இடங்களில் கலவரங்களும், அதனையொட்டி சில போலீசாருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

அத்தேர்தலின்போது காங்கிரஸ் அபேட்சகருக்காக வேலை செய்தவர்கள் பொய் வாக்குப் பதிவு செய்வதில் ஈடுபட்டிருந்ததின் விளைவாகவே இந்தக் கலவரம் ஏற்பட நேரிட்டிருக்கிறது. ஆனல், போலீஸ் அதிகாரிகளோ, கலவரத்திற்குக் காரணமானவர்கள் தி. மு. கழகத் தோழர்கள் தான் எனத் தவருகக் கருதி, அவர்களை போலீஸ் ஸ்டேஷன்களுக்குக் கொண்டு சென்று அடித்துத் துன்புறுத்தியிருக்கின்றனர். போலீஸ் அதிகாரிகளின் இச்செயல் உண்மையிலேயே வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

போலீஸ் அதிகாரிகள் இத்தகைய ஒருதலைப்பட்சமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்வதைத் தடுக்க சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கடந்த தேர்தலின்போது தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும், தேர்தல் சுமூகமாக நடைபெறுவதற்கான எல்லா ஒத்துழைப்புகளையும் தங்களாலியன்ற அளவு வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.